ISSN: 2394-7535

நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்
பல்கலைக்கழக மானியக்குழு (UGC) அங்கீகாரம்பெற்ற மாதஇதழ்

பன்னாட்டுக் கருத்தரங்கம் - 2022
முதுகலைத் தமிழ்த்துறை
சிறப்பிதழ்: ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் தன்னாட்சிக் கல்லூரி
பெரியகுளம் - 625 601, தேனி மாவட்டம்.

# இலக்கியங்களில் இயற்கை

சிறப்பிதழ் ஆசிரியர்
Special Issues Editor
முனைவர் தே.ராஜசீலி

சிறப்பிதழ் துணை ஆசிரியர்கள்
Special Co - Editors
முனைவர் ஞா.பிரான்சிஸ் கேதரின்
துறைத்தலைவர்
முனைவர் வே.புளோரா பவுலின் மேரி
முனைவர் சௌ. ஜான்சிராணி
திருமதி லூ.சவரியம்மாள்

ISSN: 2394-7535

நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்

பல்கலைக்கழக மானியக்குழு (UGC) அங்கீகாரம் பெற்றது

பன்னாட்டுக் கருத்தரங்கம் - 2022

முதுகலைத் தமிழ்த்துறை

சிறப்பிதழ்: ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் தன்னாட்சிக் கல்லூரி

பெரியகுளம் - 625 601, தேனி மாவட்டம்.

# இலக்கியங்களில் இயற்கை

சிறப்பிதழ் ஆசிரியர்

**Special Issues Editor**

முனைவர் தே.ராஜசீலி

**சிறப்பிதழ் துணை ஆசிரியர்கள்**

**Special Co - Editors**

முனைவர் ஞா.பிரான்சிஸ் கேதரின்,

துறைத்தலைவர்

முனைவர் வே.புளோரா பவுலின் மேரி,

முனைவர் செள.ஜான்சிராணி,

திருமதி லூ.சவரியம்மாள்

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி. சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,

அம்பத்தூர், சென்னை - 600 050.

☎: 044 - 26251968, 26258410, 48601884

Language: Tamil

**Ilakkiyangalil Iyarkai**

Special Issues Editor: **Dr.D.Rajaseeli**

Special Co-Editors: **Dr.G. Francis Catherin,** Head of the Department

**Dr.V.Flora Pauline Mary,**

**Dr.S.Jhansi Rani,**

**Mrs.L.Savariammal**

First Edition: January, 2023

Copyright: Publisher

No. of pages: 836

Publisher:

**New Century Book House Pvt. Ltd.,**

41-B, SIDCO Industrial Estate,

Ambattur, Chennai - 600 050.

Tamilnadu State, India.

Email : info@ncbh.in

Online : www.ncbhpublisher.in

**₹ 2300/-**

**Branches**

**Ambattur** 044- 26359906, **Spenzer Plaza (Chennai)** 044-28490027 **Trichy** 0431-2700885 **Pudukkottai** 04322-227773 **Thanjavur** 04362-231371 **Tirunelveli** 0462-4210990, 2323990 **Madurai** 0452-2344106, 4374106 **Dindigul** 0451-2432172 **Coimbatore** 0422-2380554 **Erode** 0424-2256667 **Salem** 0427-2450817 **Hosur** 04344-245726 **Krishnagiri** 04343-234387 **Ooty** 0423-2441743 **Vellore** 0416-2234495 **Villupuram** 04146-227800 **Pondicherry** 0413-2280101 **Nagercoil** 04652-234990

**இலக்கியங்களில் இயற்கை**

சிறப்பிதழ் ஆசிரியர்

**முனைவர் தே.ராஜசீலி**

சிறப்பிதழ் துணை ஆசிரியர்கள்

**முனைவர் ஞா.பிரான்சிஸ் கேதரின், துறைத்தலைவர்**

**முனைவர் வே.புளோரா பவுலின் மேரி,**

**முனைவர் செள.ஜான்சிராணி,**

**திருமதி லூ.சவரியம்மாள்**

முதல் பதிப்பு: ஜனவரி, 2023

அச்சிட்டோர்: பாவை பிரிண்டர்ஸ் (பி) லிமிடெட்.,

*16 (142)*, ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - *14*

**☎: 044 - 28482441**

All rights reserved. No part of this book may be reprinted or reproduced or utilised in any form or by any electronic, mechanical, or other means, now known or hereafter invented, including photocopying and recording, or in any information storage or retrieval system, without permission in writing from the publishers.

152. நற்றிணை காதலில் இயற்கை 763
முனைவர் ம.ஜஸ்டின் பியுலா

153. சங்ககாலம் முதல் இக்காலம் வரையிலுள்ள - இயற்கையின் காதல் 767
முனைவர். ச.பத்மா

154. குறுந்தொகைபாடல்களில் இயற்கை - ஓர் எடுத்துரைப்பியல் நோக்கு 772
செ.ஸ்டாலின்

155. பாரதிதாசன் பாடல்களில் இயற்கை - காட்சிப்படுத்தல் உத்தி 776
இரா. காந்திமதி

156. நற்றிணையில் தாவரங்களைச் சுட்டும் ஈரெழுத்து ஒருமொழிகள் 780
பி.சுமித்திராதேவி & முனைவர் A.விஜயலெட்சுமி

157. சிலம்பில் மலர்கள் 784
து.பிரகாஷ் & முனைவர் சு.இரவிச்சந்திரன்

158. 'பாலைத்திணையில் உள்ளுறை இறைச்சி வழி மெய்ப்பாடு' 789
இரா.திலகவதி

159. இலக்கியங்களில் இயற்கை 795
செ.தினேஷ் & முனைவர் இரா.செல்லமுத்து

160. இலக்கியத்தில் இயற்கை 800
முனைவர் கொ.பரிமளம்

161. ஜெயமோகனின் பிரயாகை நாவலில் கங்கை வழிபாடு 803
க.சந்திரலேகா

162. சோ. தர்மனின் சூல் நாவலில் இயற்கை 807
வெ.முருகேஸ்வரி & முனைவர் பே.மஹேஸ்வரி

163. நற்றிணை நெய்தல் திணையில் உள்ளுறையும் காட்சிப்படுத்துதலும் 811
அ.சரளாதேவி & முனைவர் தெ.மேகநாதன்

164. அப்துல் ரகுமான் சுட்டும் மனித வாழ்வியலுடனான இயற்கைக் குறியீட்டுச் சித்திரங்கள் 816
க.மகேந்திரன் & முனைவர் கு.சந்திரன்

165. திருவாசகத்தில் இயற்கைத் தாவரங்கள் 821
ஜி.டி.பன்னீர் செல்வம்

166. பிச்சிப்பூ நாவலில் ஐந்திணைப் பதிவு 827
முனைவர்.மு.அனுசுயாதேவி

167. தமிழ் இலக்கியங்களில் இயற்கைச் சூழல் வருணனை 832
முனைவர் வெ.அர.தாரணி

# 162. சோ. தர்மனின் சூல் நாவலில் இயற்கை

வெ.முருகேஸ்வரி
முனைவர் பட்ட ஆய்வாளர்
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி
பொள்ளாச்சி

முனைவர் பே.மஹேஸ்வரி
நெறியாளர் - பேராசிரியர்
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி
பொள்ளாச்சி

**ஆய்வுச்சுருக்கம்**

முன்னைப் பழமைக்கும் பழமையாய் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் பேர்த்தும் அப்பெற்றியதான மொழி தமிழாகும். இம்மொழியில் எழுந்துள்ள இலக்கியங்கள் தொன்மையும், சிறப்பும் கொண்டு விளங்குகின்றன. பழந்தமிழ் இலக்கியங்கள் தொடங்கி, இற்றை நாள் எழும் இலக்கியங்கள் வரை இயற்கையை போற்றாத இலக்கியங்கள் இல்லை எனலாம். சங்கத் தமிழகத்தை நாவீறு பெற்றுத் திகழ்ந்த நக்கீரர் முதல் இன்று வரை அண்மைக்காலம் வரை நம்மிடையே வாழ்ந்த தமிழ்க் கவிஞர்கள் தங்கள் படைப்புக்களில் இயற்கை வர்ணனைக்கென்று இடம் ஒதுக்கியிருக்கின்றனர். இயற்கை மக்களுக்கு அளித்த கொடைகள் பலவென்றாலும் அவற்றுள் கதிரவன் முதன்மையான இடம்பெறுகின்றது. திருமுருகாற்றுப்படையில் (1-2) "உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டாஅங்கு" - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சங்க இலக்கியத்தில் மக்கள் இயற்கையோடு இயற்கையாக வாழ்ந்தனர். மரங்கள், நீர், நிலம், காற்று போன்ற இயற்கை சார்ந்த சூழல்களில் வாழ்க்கையை நடத்தியுள்ளமை போற்றற்குரியதாகும். எல்லா உயிர்களையும் தம் உயிர் போல் எண்ணி வாழ்ந்தமையையும் அறியமுடிகிறது. சங்க இலக்கியப் பனுவல்கள் இயற்கை பண்பாடு ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றன. மக்களின் வாழ்வியல், சுற்றுச்சூழல் ஆகியவை சார்ந்த செய்திகள் பதிவாகியுள்ளன. மனிதச் சமூகத்திற்கும் இயற்கைக்கும் இடையிலான உறவை சூழல் விளக்குகிறது. மனிதச் சமூகமும், பண்பாடும் தகவமைத்தலின் உற்பத்தி பொருட்களாக அல்லது விளைவுகளாக ஒரு குறிப்பிட்ட இயற்கைச் சூழலில் வெளிப்படுகின்றன என்பதே அடிப்படை நோக்கமாகும். மனிதன் தான் வாழும் நிலவியல் எல்லையில் அமைந்திருக்கும் சுற்றுச் சூழலைத் தன்னுடைய சமூக வாழ்க்கையோடு இணைத்துக் கொள்வது மரபு. வாழ்வியல் ஆதாரம், பாதுகாப்பு போன்றவை இயற்கைச் சூழலை மையமாகக் கொண்டு அமைகிறது. இதன் அடிப்படையில் சோ.தர்மன் நாவல்களில் பதிவாகியுள்ள இயற்கைச் சூழலியல் குறித்த சிந்தனைகளைப் பதிவு செய்கிறது இக்கட்டுரை.

சூழல் என்பது மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான உறவை ஆராய்கிறது. வயல்களும், மரங்களும் செழித்து இயற்கை வேளாண்மை பாதுகாக்கப்பட்டு சூழல் மாசு அடையாமல் பார்க்கவேண்டும் என்ற சிந்தனை மக்களிடையே பரவ வேண்டும். பூமி வெப்பமடைந்து மனித இனம் துன்பம் அடைந்து வருகிறது. இயற்கையின் மீது செலுத்தி வரும் ஆதிக்கத்தின் வினையாக எதிர் ஒரு கூறான மனித இனம் தொடர்ந்து இயற்கையின் விளைவுகளைச் சந்திக்கத் தொடங்கியுள்ளது. காலநிலை மாற்றங்களால் பெரும் ஆபத்தைச் சந்தித்து வரும் சமூகம் தற்போது தான் இயற்கையின் மீதான கவனிப்பை வெளிப்படுத்தத் தொடங்கியிருக்கிறது. இயற்கையைப் புரிந்து கொள்வதன் மூலம் அதனைச் சார்ந்து வாழும் மனித இனம் தன் இருப்பை நிலைநிறுத்திக் கொள்கிறது என்பதை நாவல் பதிவு செய்கிறது.

## முன்னுரை

இந்தப் பூமி அழகாக காட்சி தருவதற்கு காரணம் பசுமை நிறைந்த சோலைகளாய் உள்ள இயற்கையே ஆகும். ஆதி கால மனிதன் இயற்கையின் ஆடைகளை அணிந்து வாழ்ந்தனர். கால மாற்றத்தின் காரணமாகவும், மனிதனின் அறிவு வளர்ச்சியின் அந்தமாகப் பல பரிமாணங்களைக் கடந்து வந்தான். மரம், செடி, கொடியோடு ஊர்வன, பறப்பன, மேய்வன, அசைவனவும், இந்தப் பூமிக்கு புத்துயிர் ஊட்டின. இவற்றைச் சார்ந்தும் சேர்ந்தும் மனித வாழ்க்கைப் பயணம் பயணமாகின்றது. இயற்கை இல்லா வாழ்வை மனித உயிர்கள் வாழ வழியில்லை என்றே ஆணித் தரமாகக் கூற முடியும். மனிதன் இயற்கையோடு இயைந்து வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கிற இக்காலங்கள் வரை, இயற்கை உற்ற தோழனாக, இருப்பது என்பது அனைவரும் அறிந்த ஒன்றே ஆகும். இயற்கை

இல்லையேல் மனித உயிர்களும் பிற உயிரினங்களும் இந்த பூமியில் வாழத் தகுதியற்றவர்கள். உலகின் உயிர் நாடியாய் இருப்பதும் அனைத்து உயிரினங்களையும் தன் ஆளுகைக்குள் ஒரு சேர அரவணைத்து வழி நடத்தும் இயற்கையின் இரகசியங்கள் ஏராளமானவை.

## சூழ் நாவலில் இயற்கை

இயற்கையும், இயற்கை சார்ந்த கருத்துக்களும், மனித வாழ்விற்கும் பயன்படும் ஒன்றாகக் காணப்படுகிறது. மேலும், மனிதன் இவற்றை சார்ந்து வாழும் சாருண்ணியாக இருப்பதையும், பல நன்மைகளை மனித உயிர்களுக்கு விட்டுச் செல்லும் மகத்தான பணி எவ்வாறெல்லாம் நடைபெறுகின்றன என்பதையும் அறியப்படுகின்றன. ஒரு சிறிய தாவரம் முதல், பெரிய மரங்கள் வரையும், நீர்வாழ் உயிர்கள் முதல் நிலவாழ் உயிர்கள் வரையும் பறக்கும் பட்சிகளும் பார்க்கும் போது, இந்த பூமியில் வாழ்ந்ததற்கான வாழும் காலம் வரை தனது அடையாளங்களை எச்சங்களாய் விட்டுச் செல்கின்றன. இது எவ்வாறெல்லாம் மனித வாழ்விற்கு இயற்கை சார்ந்த உறவுகளாய் அமைந்துள்ளது என்பதே இக்கட்டுரையின் ஆய்வு நோக்கமாக உள்ளது. மனிதன் இந்த பூமிப் பந்தில் தலைமைப் பொறுப்பாகக் காணப்பட்டாலும் இவற்றை சிறந்த முறையில் செயலாக்கம் செய்யும் செயலை இயற்கையால் வாழும் பிற உயிரினஙகள் வழி நடத்தினர் என்பதை சூல் நாவலில் சோ.தர்மன் அழகாய் வடித்துள்ளார். மேலும் அவை எவ்வாறு மனித வாழ்விற்கு பயன்படுகின்றன என்பதையும் இக்கட்டுரையின் வாயிலாக அறியலாம். இயற்கையாகவே மனிதன் தவிர, மற்ற உயிர்கள் அனைத்தும் தன் செயல்களை தடையின்றி செய்வதையும், இதனால் மனிதன் மட்டுமே அதிக நன்மையடைகின்றான் என்பதுமே ஆய்வின் அனுபவங்களும் முடிவுகளும் வெளிப்படுவதாக இருக்கின்றது.

## கதை மாந்தர் படைப்பில் இயற்கைத் தன்மை

உள்ளதை உள்ளபடி சொல்லும், சொல்லுக்கு வேந்தனாக சோ.தர்மன் தன் படைப்பில் இயற்கையாகவே இயற்கை பற்றியும் அவற்றின் செயல்பாடுகளை எந்த வித செயற்கைச் சாயங்கள் பூசாமல் தான் பார்த்தும், கேட்டும் உணர்ந்த கருத்துக்களை இந்நாவலில் பதிவிட்டுள்ளார். நீர்வாழ் உயிர்கள், நிலவாழ் உயிர்கள், பேசும், பேசா உயிர்கள் அனைத்துமே ஒரு பிரிக்க முடியாத வலையைப் போன்று இருப்பதையும், இவரின் நாவலில் ஆய்வு செய்ய முடிகிறது. இதனால் மனித உயிர்களுக்கு இயற்கை எவ்வளவு உயிர்நாடியாக உள்ளதை சோ.தர்மன் உரக்கச் சொல்லியிருக்கிறார். மேலும் இது இன்றைய காலகட்டத்தின் தலையாய கடமையும், அதனை பாதுகாக்கும் பொறுப்பும் மனித கூட்டங்களுக்கு மட்டுமே இருக்கிறது என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளார். மேலும், இன்றைய தலைமுறைகளின் வாழ்வில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்க்கும் ஒரு அருமருந்தாக இயற்கை இருப்பதையும், அதனை அழியாமல் பேணிக்காக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறார். இதனை தம் எளிய நடையாலும், சொல்லாலும் பல கதைமாந்தர்களைப் படைத்து அவற்றின் வாயிலாக நமக்கு உணர்த்தியுள்ளார். இந்நாவலில், முத்துவீரன், நீர்ப்பாய்ச்சி, குப்பாண்டி, நங்கிரியான், மகாலிங்கம் பிள்ளை, சண்முகன் ஆசாரி போன்ற கதை மாந்தர்களின் வாயிலாக இயற்கையைப் பாதுகாக்கும் முறையையும் மக்களின் வாழ்வாதாரமாக இயற்கை அமையும் விதத்தினையும் எடுத்துரைத்துள்ளார். பறந்து விரிந்த இந்த இயற்கையின் சாரல் இல்லாமல் எந்த உயிர்களும் இயங்க வழியில்லை என்பதை எளிமையான வார்த்தைகளால் எதார்த்தமாக எடுத்துக் கூறியிருக்கிறார்.

## மழையின் மகத்துவம்

இயற்கையின் ஆணைப்படி மேகங்கள் நமக்கு மழையைப் பொழிகின்றன. இதுவும் ஒரு சுழற்சி முறையே ஆகும் என்றாலும் இயற்கையையும் இயற்கை சார்ந்து வாழும் பிற உயிரினத் தேவைகளும் பருவத்தின் மழையும், பக்குவமும் நமக்குத் தேவைப்படுகின்றது. இன்ன தேதியில் மழை வரும் என்று அறிவியல் ஆய்வுப்படி அறுதியிட்டுச் சொன்னாலும், இந்த அண்டத்தின் வளர்ச்சியில் உணவுத் தேவை என்பது முக்கிய இடம் வகிக்கிறது. இதனை உருவாக்கும் உற்பத்தியாளரின் விவசாயிக்கு மட்டுமே நன்கு தெரியும் மழை வரும் காலம் பற்றி இயற்கை முறையில் விவசாயம் செய்யும் கால அளவையும், மழையின் காலத்தையும் இந்த இயற்கை மனிதன் தன் அறிவு நுட்பத்தால் அறிந்து வைத்துள்ளான். மழையே மற்ற உயிர்களின் பிரதான ஆதாரம் என்பதை இங்கு பல ஆய்வு முடிவுகளில் காணப்படுகின்றது. இயற்கை முறையில் விவசாயம் செய்யும் இலக்கணத்தைச் சொல்லித் தந்தவர்கள் முன்னோர்கள். இந்த வழித் தோன்றலில் வந்த நாம் சிந்தித்து செயல்பட வேண்டும். "நீரின்று அமையாது உலகு" என்ற வரிகளுக்கு வலுச் சேர்க்கும் விதமாக பல கண்மாய்கள், குளங்கள், ஏரிகள், நீர்நிலைகளை கட்டியும், பாதுகாத்தும் வந்த நமது முன்னோர்களின் வழிப்படி சென்றால் இந்த இயற்கை என்னும் சோலையை வசந்தமாகவே காணப்படும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

"இந்தப் பக்கவாட்டில் ஒவ்வொரு காட்டிலும் ஒரு வாசல் இருக்கும். இந்தப் பக்கவாட்டு வாசல்கள் தெற்குப் பக்கம் பார்த்தப்படி பெரும்பான்மையாக இருந்தால் அந்த வருசம் வடகிழக்குப் பருவமழை அதாவது வடகத்து மழை ஜாஸ்தி, பெரும்பான்மைக் கூடுகளின் வாசல்கள், வடக்குப் பக்கம் பார்த்தப்படி இருந்தால் தெக்கத்தி மழை அதாவது தென்மேற்கு பருவமழை ஜாஸ்தி" (ப.எ.7) என மழையின் வரவை பறவைகள் கட்டும் கூடுகளின் அமைப்பைப் பொறுத்து நம் முன்னோர்கள் மழையைக் கணித்துள்ளனர்.

மேய்த்து கொண்டிருக்கும் ஆடுகள் ஒரிடத்தில் கூடி நின்றால் அந்த இடத்தில் மழை வரும் என்பதை நம் முன்னோர்கள் அறிந்து வைத்துள்ளனர். மேலும், தூண்டிலில் எந்த மீனும் அகப்படாமலும், தைலான் என்ற குருவி தரையோடு தரையாகப் பறந்து திரிந்தாலும், இரவில் நிலா ஒளி வட்டம் போன்ற அமைப்பில் இருந்தாலும், எறும்புகள் முட்டைகளைத் தூக்கிட்டு சாரை சாரையாக மேட்டுப்பகுதியை நோக்கிச் சென்றாலும் மழைவரும் என்பதை சூல் நாவலில் காணமுடிகிறது. கூகை என்ற பறவை இரவில் அலறும் போதும், நாமக்கோழி என்ற பறவை அதிகமாகக் காணப்படும் போதும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகள் செழிப்படையும் என்ற செய்தியையும் நாவலில் காணமுடிகிறது.

**இயற்கை விவசாயம்**

நமது முன்னோர்கள் பெரும் நோயின்றி வாழ்ந்ததற்கு முக்கிய ஆதாரமே இயற்கை சார்ந்த வாழ்வும், உணவு பழக்க வழக்கங்கள் மட்டுமே காரணமாகும். அன்பு நிறைந்த வாழ்க்கையும், எதையும் சகித்துக் கொள்ளும் மனப்பக்குவமும் நிறைந்த மனிதர்களாய் இருந்ததற்கு இயற்கை இவர்களுக்கு வழிகாட்டியது. இன்றைய காலகட்டத்தில் உணவு முறையில் பல மாற்றம், அதனால் சொல்லில் அடங்கா நோய்கள், என்று நாம் சந்தித்து வருகிறோம். இயற்கை சார்ந்தும் அதனோடு பயணித்து சென்ற விவசாயமும் தூய்மையானதாக இருந்தது என்பதை சோ.தர்மன் தனது நாவலில் எடுத்துக் கூறியுள்ளார்.

“சங்கன் குப்பைக் குமிகளைக் கூடையில் அள்ளி, இரு கைகளிலும் ஏந்தி வட்டம் சுற்றி வீசி எறிகிறான். சிதறி விழும் குப்பைகளினூடே பருத்திச் சுளைகளைப் போல் வெள்ளை வெளேரென்று நிலத்தில் விழும் குப்பை புழுக்கள், அப்படியே பலாச்சுளைகளை நிலத்தில் வீசி எறிந்தது போல் பரவிக் கிடக்கின்றன.” (ப.எண்:4)

இப்படி இயற்கை முறையில் குப்பைகளையும், இலை, தழைகளையும் உரமாக்கிய விவசாயம் செய்யப்பட்டது என்பதையும் நான்கு அங்குல ஆழத்தில் விதைகளை நடவேண்டும் என்ற நுட்பத்தை நமக்கு சொல்லிச் சென்றனர் நம் முன்னோர் என தனது நாவலின் வரிகளை வர்ணமிட்டுள்ளார் சோ.தர்மன்.

**மரம், செடி, கொடிகளின் பங்கு**

இயற்கையின் இன்னொரு அழகு மரம், செடி, கொடிகள் ஆகும். இந்த அழகிய பூமிப்பந்தை சூழ்ந்து இருப்பது இவையே ஆகும். மண்ணின் முதல் மைந்தர்கள் இவர்களே. மனிதன் இயற்கைச் சார்;ந்த செயல்கள் செய்யும் போது இவை பெரிய ஆதாரமாக துணை நிற்கின்றன. நீரினைத தேக்கி வைக்கும் கண்மாய்கள், ஏரி, குளம் போன்றவற்றிற்கு பாதுகாப்பு அம்சமாக இருக்கின்றது என்பதை சோ.தர்மன் தனது நாவல்களின் வழியாக உணர்த்துகிறார்.

“ஆண் பனயில நொங்கு காய்க்காம வெறும் கதிரு மட்டும் இருக்கும். பொட்டப் பனையில பாளை தள்ளி பனங்காயி குலைகுலையா காய்ச்சிருக்கும்” (ப.எ.9)

“ஏல பன வந்து தென்ன மாதிரியில்ல, வருசத்துல கோடையில மட்டும் தான் குலை தள்ளும். மத்த காலங்களில ஆண் பனைக்கும் பொட்டப் பனைக்கும் எந்தக் கொம்பேறினாலும் வித்தியாசம் கண்டு பிடிக்க முடியாது” (ப.எ.9) என்று பனைமரங்களின் இயல்பு நிலையையும், பனை மரங்கள் குறுகிய காலப் பயிர் இல்லையென்றும், அது நீண்ட காலப் பயிர் என்றும் இவ்வாய்வு நமக்கு உணர்த்திற்று. பனை மரங்கள் மண் அரிப்பை தடுப்பதால் காடு, நீர்நிலைகள் போன்ற இடங்களில் மனிதனின் தேவைக்காக வளர்க்கிறான். பனையின் பயன்பாடு மனிதர்களுக்கு பெரிதும் பயனுள்ளதாக அமைகிறது என்பதை சோ.தர்மன் தனது நாவலில் “கடுங் கோடையிலும் ஆதாளைச் செடியும் கொக்கிரவாளிச் செடியும் ஒற்றை வேலில் உயிர் வாழும்” என்பதையும் இயற்கையின் மகத்துவத்தையும் எடுத்துரைத்துள்ளார்.

சங்கன் செடிகள் கண்மாய்க் கரைகள் கரைந்து விடாமல் இறுக பற்றிக் கொள்வதையும் சொ.தர்மன் தன்னுடைய நாவலில் பதிவிட்டதை இயற்கையில் உள்ள ஒரு சிறிய தாவரம் கூட மனித வாழ்விற்கு பயனுள்ளதை காண முடிகிறது.

**நீர் வாழ் உயிரினங்கள்**

மனித வாழ்க்கைச் சங்கிலியில் நீர் வாழ் உயிரினங்களும் முக்கிய இடம் பெறுகின்றன. மண்ணுக்கும், மனிதனுக்கும், பிற பறவையினங்களுக்கும் பயனுள்ள வகையில் நீர்வாழ் உயிரினங்கள் இருக்கின்றன. “ஆரா உளுவை, கெண்டை, பாம்புக் கெண்டை, கூனக் கெண்டை, பல் கெண்டை, வட்டக்கெண்டை, அயிரை, கெளுறு, கொரவை, விலாங்கு, விரால், ஊளி, தேழி” (ப.எ.467) போன்ற நமது நாட்டு மீன்கள் இயற்கையைப் பாழ்ப்படுத்தாமல் வாழ்கிறது. நீர் வற்றிய கண்மாய், ஏரி, குளங்களில் மண்ணின் அடிப்பகுதியில் மீன்களின் முட்டைகள் பாதுகாக்கப்பட்டு மறு மழையின் நீர்த்தேக்கத்தில் குஞ்சுகள் பொறிக்கும் அபூர்வத்தை இயற்கை நமக்கு அளித்துள்ளதை சூழ் நாவலில் சோ.தர்மன் நமக்கு எடுத்துரைத்துள்ளார்.

## முடிவுரை

மனிதன் இயற்கை சார்ந்த வாழ்க்கை முறைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டதையும், பிற உயிர்களின் பங்களிப்பு இயற்கையோடு இணைந்தே இருப்பதையும், இந்த ஆய்வுநோக்கம் நமக்கு புலப்படுத்துகிறது. மேலும் தாவர இனங்களும் எண்ணிலடங்கா பிற உயிரினங்களோடு சேர்ந்த மனித வாழ்க்கையும் ஒரு சங்கிலித் தொடரைப் போன்று ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து இருக்கும். இந்தப் பூமிக்கோலம் இயற்கையை முதன்மையாக வைத்து வழி நடத்துகின்றன என்பதை சூழ் நாவல் எடுத்தியம்புகிறது.

## அடிக்குறிப்புகள்

*1. சோ.தர்மன் - சூல் முதற்பதிப்பு 2016, 1205.1 கருப்பூர் சாலை, புத்தாநத்தம் 621 320.*